செய்தி வெளியீடு எண்:321 நாள்: 25.06.2021

**செய்தி வெளியீடு**

# தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு கொரோனா தடுப்பூசி சிறப்பு முகாமையும், வெளிமாநிலத் தொழிலாளர்களுக்குக் உணவுப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு வழங்கும் திட்டத்தையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்

கொரோனா பெருந்தொற்றிலிருந்து கட்டுமானத் தொழிலாளர்களைப் பாதுகாத்திடும் சீரிய நோக்கத்தோடு, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்தில் பதிவு பெற்ற 13,41,494 தொழிலாளர்களுக்குக் கொரோனா தடுப்பூசி செலுத்திட வேண்டும் என்று பிறப்பிக்கப்பட்ட ஆணைக்கிணங்க, முதற்கட்டமாக 2 இலட்சம் கட்டுமானத் தொழிலாளர்களுக்குச் சிறப்பு முகாம் மூலமாகக் கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணியினையும், கொரோனா பெருந்தொற்றுப் பரவல் காரணமாக அறிவிக்கப்பட்ட பொதுமுடக்கத்தால் பணிவாய்ப்பை இழந்த, குடும்ப அட்டை இல்லாத, புலம்பெயர்ந்த வெளி மாநிலத் தொழிலாளர்கள் பசியால் வாடக்கூடாது என்ற உயரிய எண்ணத்தோடு, 1,29,444 தொழிலாளர்களுக்கு 6 கோடியே 66 இலட்சத்து 44 ஆயிரத்து 243 ரூபாய் மதிப்பீட்டில், 15 கிலோ அரிசி, 1 கிலோ துவரம் பருப்பு, 1 கிலோ சமையல் எண்ணெய் ஆகிய உணவுப் பொருட்கள் அடங்கிய தொகுப்பை வழங்கும் திட்டத்தையும் இன்று (25.06.2021) நந்தனம் அரசினர் ஆடவர் கலைக் கல்லூரியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

இவ்விழாவில், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன், மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. சி.வி.கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.எம். சண்முகம், திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை செயலாளர் திரு. ஆர்.கிர்லோஷ் குமார், இ.ஆ.ப., தொழிலாளர் துறை ஆணையர் முனைவர் மா.வள்ளலார், இ.ஆ.ப., தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் திரு.எம்.வி. செந்தில்குமார், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் பல்வேறு தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

************

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9